RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 83 | ஏப்ரல்.1 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "தமிழகத்தில் அதிமுக அடிமை ஆட்சி அமையவிடக் கூடாது" அரூரில் உதயநிதி பிரச்சாரம்

அரூர்: ஏப்.1-

"தமிழகத்தில் அதிமுக அடிமை ஆட்சியை அமைய விடக்கூடாது. பிரதமர் மோடி அமித் ஷா ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யாத பாஜகவை தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்." என தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் இன்று தேர்தல் பரப்புரையில் திமுக இளைஞரணி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஈடுபட்டு வருகிறார். முதலாவதாக அரூர் (தனி) தொகுதி திமுக வேட்பாளரான அ. சண்முகத்தை ஆதரித்து தமிழக துணை முதல்வரும், திமுக இளைஞரணி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், "திமுக மீண்டும் ஆட்சி அமைத்த உடன் இல்லத்தரசி திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.8,000 மதிப்புள்ள ஒரு கூப்பன் வழங்கப்பட்டும். அதில் வீட்டுக்கு தேவையான எலக்ட்ரானிக்



சாதனங்களை வாங்கிக் கொள்ளலாம். கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழகம் இருந்து வருகிறது. ஒன்றிய அரசு நாம் கேட்கின்ற நிதியை கொடுக்கவில்லை, மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை பார்த்து பார்த்து தமிழக முதல்வர் ஸ்டாலின் செய்துள்ளார். இனியும் இது தொடர வேண்டும்.

மீண்டும் அதிமுக அடிமை ஆட்சியை தமிழகத்தில் அமைய விடக்கூடாது, பிரதமர் மோடி அமித் ஷா ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகின்றனர், தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யாத பாஜகவை தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும், அதிமுகவுக்கு போடப்படும் வாக்கு பாஜகவுக்கு போடும் வாக்கு. இது தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் நடக்கக்கூடிய தேர்தல், மோடியா தமிழ்நாடா என பார்க்கக்கூடிய தேர்தல். ஒவ்வொரு முறையும் டெல்லியை ஓட ஓட விரட்டிக் கொண்டு இருக்கிறோம், மோடி அமித் ஷாவைக் கூட ஓட ஓட விரட்டி இருக்கிறோம்.

இந்த தேர்தலிலும் மோடியையும் அமித் ஷாவையும் விரட்ட வேண்டும், ஜாடிக்கேற்ற மூடி என்ற பழமொழி உள்ளது. அதே போல தான் மோடிக்கு ஏத்த எடப்பாடி இருக்கிறார், முரட்டு பக்தர் போல இருக்கும் முரட்டு அடிமையை விரட்டி அடிக்க வேண்டும் . பத்து தோல்வி பழனிசாமியை மொத்த தோல்வி பழனிசாமியாக்கி விரட்ட வேண்டும்," என்றார்.

இதனைத் தொடர்ந்து திமுக வேட்பாளர் சண்முகத்திற்கு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



## "நெல்லை தொகுதியை விட்டுக்கொடுத்தது ஏன்?" நயினார் நாகேந்திரன் பதில்

சென்னை: ஏப்.1-

"சட்டப்பேரவைத் தேர்தலில் நெல்லை தொகுதியை தான் விட்டுக் கொடுத்தது ஏன்" என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அதிமுக கேட்டுக்கொண்டதால் நெல்லைக்கு பதில், சாத்தூரில் போட்டி யிடுகிறேன். வேட்பாளர் பட்டியல் அறிவித்தவுடன் சாத்தூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வேன். எந்த தொகுதிக்குச் சென்றாலும், தமிழகம் முழுவதும் மக்கள் பணி தொடரும்.

நெல்லைக்கு நான் எப்போதும் செல்லப்பிள்ளை தான். திமுகவை அகற்ற வேண்டும் என மக்கள் நினைத்துவிட்டனர். பாஜகவில் உள்ள தொண்டர்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாதவர்கள். நாட்டுக்காகவும், கொள்கைக்காகவும் தேசத்துக்காகவும் உழைக்கக் கூடியவர்கள். தொகுதி எண்ணிக்கை முக்கியமல்ல, மக்கள் எண்ணம் தான் முக்கியம். பாஜக வேட்பாளர்கள் வரும் 4ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்வார்கள்.

நாங்கள் இன்று மாலை திமுகவின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவிருக்கிறோம். திமுக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. பத்திரிக்கை சுதந்திரம் சரியில்லை. பிரதமர் மோடிக்கு திமுக நிர்வாகி ஒருவர் கொலை மிரட்டல் விடுக்கிறார். கடந்த கால திமுகவின் தேர்தல் அறிக்கை ஹீரோ மாதிரி, தற்போதைய திமுகவின் தேர்தல் அறிக்கை ஜீரோ. மதச்சார்பு, மதச்சார்பு என சொல்லும் திமுக, அனைத்து மதங்களுக்கும் நாங்கள் தான் பாதுகாப்பு என சொல்கிறது. ஆனால் மதம் சார்ந்து இருக்கிறது அவர்கள்தான்.

முதல்வர் ஸ்டாலின் தீபாவளிக்கு வாழ்த்துச் சொல்ல மாட்டார். கிறிஸ்துமஸுக்கு வாழ்த்து சொல்லுவார். ஆனால் நாங்கள் இஸ்லாமிய, கிறிஸ்துவ பண்டிகைகள் என அனைத்துக்கும் வாழ்த்து தெரிவிக்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கபட்டுள்ள ஊடக கண்காணிப்பு அறையின் செயல்பாடுகளை 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி தேர்தல் செலவின பார்வையாளர் திரு.அபினவ் உஜ்ஜய்னியா, IRS., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## ஒற்றுமையில்லாதவர்கள் புதுச்சேரிக்கு நல்லாட்சி தருவது எப்படி? : இண்டியா கூட்டணிக்கு அண்ணாமலை கேள்வி

புதுச்சேரி: ஏப்.1-

30 தொகுதிகளை கூட சரியான இடஒதுக்கீடு செய்து ஒற்றுமையாக செயல்பட முடியாத இண்டியா கூட்டணி, ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு எப்படி நல்லாட்சி வழங்குவர்? என்று அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை புதுச்சேரி விமான நிலையம் இன்று வந்தடைந்தார். அவரை கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை, புதுவையில் அமைந்துள்ள இண்டியா கூட்டணியை



கடுமையாக விமர்சித்தார். "புதுச்சேரியைப் பொறுத்தவரை உலகத்தில் எங்கும் இல்லாத விசித்திரமான கூட்டணி இது. காங்கிரஸ் கட்சி, கூட்டணி தர்மத்தை மீறி கூட்டணி கட்சிகள் போட்டியிடும் இடங்களிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுவே கூட்டணிக்குள் ஒற்றுமை இல்லை என்பதற்கான உதாரணம். அதேபோல், திமுக, விசிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இணைந்துள்ள இந்த கூட்டணியில் பரஸ்பர மரியாதை என்பதே இல்லை.

30 தொகுதிகளை கூட சரியான இடஒதுக்கீடு செய்து ஒற்றுமையாக செயல்பட முடியாத இவர்கள், ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு எப்படி நல்ல ஆட்சி வழங்குவர் ?. கூட்டணி அமைப்பதில் தோல்வி, வேட்பு மனு தாக்கல் செய்வதில் தோல்வி, என அனைத்திலும் இந்தக் கூட்டணி தோல்வியடைந்துள்ளது. தேர்தல் நாளில் இந்தக் கூட்டணி மிகப் பெரிய தோல்வியை சந்திக்கும், மக்கள் இவர்களுக்கு தக்க பதிலை வழங்குவார்கள்" என்று அண்ணாமலை கூறினார்.

## தஞ்சை அருகே முதல்வர் ஸ்டாலின் சென்ற வாகனத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை

தஞ்சாவூர், ஏப்.1-

தஞ்சாவூர் அருகே முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்ற வாகனத்தை தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் நிறுத்தி சோதனை செய்தனர்.

தமிழகத்தில் வரும் 23ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க மாநிலம் முழுவதும் தீவிர வாகனச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு அதிகாரிகள் வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கும் மேல் கொண்டு செல்லப்படும் ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். பறிமுதல் செய்யப்படும் ரொக்கப்



பணம் , பொருட்களுக்கு உரிய ஆவணங்களை காண்பித்த பிறகு அவற்றை விடுவித்து வருகின்றனர் .

இந்த நிலையில் திருவாரூரில் இன்று மாலை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் ஆதரித்துப் பிரச்சாரம் மேற்கொள்கிறார் . இதற்காக முதல்வர் இன்று காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் தஞ்சாவூர் விமானப்படை தளத்திற்கு வந்தார் . பின்னர் அவர் அங்கிருந்து பிரச்சார வாகனத்தில் சாலை மார்க்கமாக திருவாரூர் நோக்கி புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார் .

இந்த வாகனத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்டோரும் உடன் இருந்தனர். தஞ்சாவூர் அருகே சாலியமங்கலம் நாலுரோடு பகுதியில் வாகனம் சென்றபோது அங்கு தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் முதல்வரின் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர்.

வாகனத்தில் இருந்த பைகள் மற்றும் உடைமைகளை திறந்து சோதனையிட்டனர் . இந்தச் சோதனை ஓரிரு நிமிடம் நடைபெற்றது. வாகனத்தின் முன்சீட்டில் அமர்ந்து இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பறக்கும் படையினருக்கு ஒத்துழைப்பு அளித்தார் .தேர்தல் பறக்கும் படையினரின் சோதனைக்குப் பிறகு திருவாரூர் நோக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாகனம் சென்றது.

## சுவிதா செயலியில் பெறப்பட்ட 724 விண்ணப்பங்கள் ஏற்பு: மாவட்ட தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை: ஏப்.1-

மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள், பேரணி, தெருமுனைக் கூட்ட பிரச்சாரம் நடத்துதல், வாகனங்கள் மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்துதல், தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்டவற்றுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் சுவிதா (Suvidha) செயலி மூலம் நிகழ்வு தொடங்குவதற்கு 48 மணிநேரத்துக்கு முன்பாக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும்.

இந்த செயலி மூலம் நேற்று காலை 11 மணி நிலவரப்படி, 1,157 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 724 விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 219 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

214 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. சென்னை மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள் நடத்த 112 இடங்கள், தெருமுனைக் கூட்டங்கள் நடத்த 179 இடங்கள் என மொத்தம் 291 இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த 291 இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கான விசிக புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் கடந்த (30/03/2026 )மானாமதுரை அனுசியா மஹாலில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். மண்டல மற்றும் மாநில பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை வாழ்த்தி, கட்சி வளர்ச்சிக்கான பணிகளை சிறப்பாக முன்னெடுக்க வேண்டுமென உரையாற்றினர்.நிகழ்வில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வே. பாலையா தலைமையிலான நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்

மானாமதுரை ஏப். 01- 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தகவல் தொழில்நுட்ப அணி (IT Wing) நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், மானாமதுரை சட்டமன்ற வேட்பாளருமான தமிழரசி ரவிக்குமார் கலந்துகொண்டு, தேர்தல் காலப் பணிகள் மற்றும்



சமூக வலைதளங்கள் வாயிலாக மக்கள் நலத் திட்டங்களை கொண்டு சேர்ப்பது குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினார்.கூட்டத்தின் முக்கிய அம்சங்கள்: * தேர்தல் களப்பணி: 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தகவல் தொழில்நுட்ப அணியினர் மேற்கொள்ள வேண்டிய வியூகங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. * திட்டங்கள் பரப்புரை: அரசின் சாதனைத் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் டிஜிட்டல் தளங்கள் வாயிலாக கொண்டு சேர்ப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. * நிர்வாகிகள் பங்கேற்பு: இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர். * கூட்டணி ஒருங்கிணைப்பு: மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் பல்வேறு பிரிவு நிர்வாகிகளும், கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்களும் இதில் பங்கேற்று சிறப்பித்தனர்.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தித் தேர்தல் பணிகளை எவ்வாறு துரிதப்படுத்துவது என்பது குறித்து இக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

# வேட்புமனு தாக்கல்: முக்கிய வழிகாட்டுதல்கள் வெளியீடு

சிவகங்கை ஏப். 01- தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.அதன்படி, வேட்புமனுக்கள் மார்ச் 30 முதல் ஏப்ரல் 6 வரை அரசு வேலை நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை பெறப்படும். மார்ச் 31, ஏப்ரல் 1, 3 மற்றும் 5 ஆகிய நாட்களில் மனுக்கள்




பெறப்படமாட்டாது.

வைப்புத்தொகை பொது மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.10,000, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.5,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுவில் குறிப்பிட்ட அளவிலான புகைப்படம் மற்றும் கூடுதல் புகைப்படங்கள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், புதிய வங்கி கணக்கு தொடங்கி அதன் விவரங்களையும் இணைக்க வேண்டும்.

வேட்புமனு தாக்கல் செய்ய வரும் போது, 3 வாகனங்கள் மற்றும் 5 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.இந்த வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# திருவையாறு திமுக வேட்பாளர் துரை . சந்திரசேகரன் வேட்பு மனு தாக்கல் செய்தார்

தஞ்சாவூர் ஏப். 1- 173 திருவையாறு தொகுதிக்குட்பட்ட வேட்பாளர்கள் நேற்று முதல் வேட்பு மனு தாக்கல் செய்ய துவங்கினர் .

இதில் திருவையாறுதொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் துரை சந்திரசேகரன் தனது வேட்பு முடிவை திருவையாறு தாலுகாவில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணனிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அவர் கடந்த ஏழு முறை வேட்பாளராக திமுகவின் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது 8வது முறையாகவும் நிறுத்தப்பட்டுள்ளார்.

இதில் 5 முறை வெற்றி பெற்றவர் தொடர்ந்து 6வது முறையாக வெற்றி பெறுவேன் என்றும் தெரிவித்தார்.

மேலும் வெற்றிக்கு உறுதுணையாக கூட்டணி கட்சிகளும் துணை இருப்பதாகவும், அதை தொடர்ந்து பொதுமக்களிடத்திலும் தனக்கு நல்ல வரவேற்பு இருப்பது என்றும் தெரிவித்தார்.

தான் தொடர்ந்து 6வது முறையாக இந்த தொகுதியில் இருந்து வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு செல்வேன் என்றும், அப்படி செல்லும் பட்சத்தில் தொகுதிக்கு தேவையான அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வேன் என்றும் தெரிவித்தார்.

நம் பகுதியில் உட்பட்ட இந்தளூர் அகரப்பேட்டை பாலம், வெண்ணாறு, வெட்டாறு பாலம், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு பேருந்து நிலையங்கள், திருவையாறு ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய அலுவலகம் மேலும் தொகுதியில் மீதமுள்ள பணிகள் அனைத்தையும் முடிப்பதற்கு ஏதுவாக தான் நடவடிக்கை மேற்கொள்வேன் என்றும் தெரிவித்தார் மேலும் தமிழக முதல்வர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்துள்ளார்.தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்கள் மூலம் நான் மிகவும் சுலபமாக வெற்றி பெற வாய்ப்பாக உள்ளதாகவும் தெரிவித்தார். அவருடன் சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் கண்ணன், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் விடுதலை வேந்தன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் அறிவழகன், தேமுதிக சட்டமன்ற தொகுதி செயலாளர் சிவக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ குன்னூர் சட்டமன்ற தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் தீனு, குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு அளித்தார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட சூண்டி அரசு உயர்நிலைப்பள்ளி வாக்குசாவடி மையத்தினை 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி பொது பார்வையாளர் ஹரீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர்களுக்கு வாக்களிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுத்தும் வகையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது



■ 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, திமுக தலைமையிலான கூட்டணியில் முக்குலத்தோர் புலிப்படை இணைந்துள்ளதாக அதன் தலைவர் கருணாஸ் அறிவித்தார். சிவகங்கை தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்த அவர், திமுக அரசின் மக்கள் நலத் திட்டங்கள் கூட்டணிக்கு வெற்றியைத் தரும் என நம்பிக்கை தெரிவித்தார். அதிமுக, பாஜக மீது விமர்சனம் செய்த அவர், விஜயின் அரசியல் வருகை திமுக வாக்குகளை பாதிக்காது என்றும் கூறினார்.

# டிரினிட்டி பள்ளியில் 30ம் ஆண்டு விழா

மாதவரம், ஏப். 1- மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி காந்திநகர் ஏழுமலை நாயக்கர் தெருவில் இயங்கிவரும் டிரினிட்டி நர்சரி அண்டு பிரைமரி பள்ளியின் 30ம் ஆண்டு விழா பள்ளியின் தாளாளர் ஆடலின் லீமா தலைமையில் நடைபெற்றது.

பள்ளியின் முதல்வர் அலெக்ஸ் ராஜேஷ் அனைவரையும் வரவேற்று பள்ளியின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். இதனைத் தொடர்ந்து விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு தனியார் பள்ளி தாளாளர்கள் மற்றும் முதல்வர்கள் நலச்சங்கத் தலைவரும் பொன்னேரி மாடர்ன் மெட்ரிக் பள்ளியின் தாளாளருமான ஜோசப் தங்கராஜ், நலச்சங்க பொதுச் செயலாளரும் அனுப்பம்பட்டு சீயோன் பிரைமரி - நர்சரி பள்ளியின் தாளாளருமான அருள்தாஸ், நலச்சங்க பொருளாளரும் பழவேற்காடு கிரசண்ட் பிரைமரி - நர்சரி பள்ளியின் முதல்வருமான





முகம்மது ஜமீல், காரனோடை ஜனதேவி பிரைமரி - நர்சரி பள்ளியின் முதல்வரும் காரனோடை நைஸ் இன்ஸ்ட்டியூட் கம்யூனிகேஷன் நிறுவன இயக்குநருமான கிளாடிஸ் ஆண்ட்ரூலா ஆகியோர் கலந்துகொண்டு விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு போட்டியில் கலந்துகொண்ட அனைத்து பள்ளி மாணவமாணவிகளுக்கு பதக்கம், கேடயம் மற்றும் சான்றிதழை வழங்கி பாராட்டி வாழ்த்தினர்.அதேபோல் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நினைவு பரிசுகளை வழங்கினர். இவ்விழாவிற்கு பெற்றோர்கள், சக ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.




# திருவையாறில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் செந்தில்நாதன் வேட்பு மனு தாக்கல் செய்தார்

தஞ்சாவூர் ஏப். 1- 173 . திருவையாறு தொகுதிக்குட்பட்ட சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் போட்டியிட செந்தில்நாதன் இன்று திருவையாறு தேர்தல் நடத்தும் அலுவலர் கண்ணனிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அதை தொடர்ந்து அவர் பேசுகையில் தொகுதியை 10 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் அந்த அந்த பகுதி மக்களுக்கு தேவையான இன்றி அமையாத பணிகளை வகுத்துள்ளதாகவும், அவற்றை செய்வதற்காக தன்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், நான் திருவையாறு தொகுதியில் செய்ய வேண்டிய பணிகள் அனைத்தையும் செவ்வனே செய்வேன் என்றும், நூறு தேவைகளை பூர்த்தி செய்வேன் என்று வாக்குறுதியுடன் கையொப்பமிட்டு வழங்கியுள்ளது உள்ளேன் என்றும் தெரிவித்தார்.





# நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கிருத்திகா ஏழுமலை வேட்புமனு தாக்கல்

மாதவரம், ஏப். 1- மாதவரம் சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வழக்கறிஞர் கிருத்திகா ஏழுமலை தனது ஆதரவாளர்கள் மற்றும் நாம் தமிழர் கட்சியின் அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் முன்னிலையில் மாதவரம் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் உழவர்களின் அடையாளமான ஏர்களப்பைவுடன் மாட்டுவண்டியில் சென்று மாதவரம் தேர்தல் நடத்தும் அதிகாரியும் கோட்டாச்சியருமான பெருமாள் இடம் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வழக்கறிஞர் கிருத்திகா ஏழுமலை தனது வேட்ப்பு மனுவை தாக்கல் செய்தார்.வட்டாச்சியர் அருள்ஜோதி மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் ஏழுமலை, கார்த்திக்பாபு உள்ளிட்டோர்கள் உடனிருந்தனர். மேலும் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் முதன்மை முகவர் ஜெயபிரகாஷ் உள்ளிட்ட நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டு வேட்பாளரை வாழ்த்தினர்.



## தாம்பரம் தொகுதி நாம் தமிழர் வேட்பாளர் பேராசிரியை தமிழ்ச்செல்வி தேர்தல் நடத்தும் அலுவலர் முரளியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்

தாம்பரம் ஏப். 01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் பல்லாவரம் தேர்தல் நடத்தும் அலுவலர் முரளி முன்பாக தாம்பரம் நாம்தமிழர் கட்சி வேட்பாளர் பேராசிரியை தமிழ்செல்வி வேட்புமனு தாக்கல் செய்தார்,

பின்பு செய்தியாளர்களிடம் பேசிய பேராசிரியை தமிழ்செல்வி தாம்பரம் பகுதி மக்கள் முக்கிய குறையாக கூறுவது கழிவு நீர்கான வழிவகை செய்யபடவில்லை , நன்னீரில் கழிவு நீர் கலப்பதால் பல்வேறு நோய்களால் பதிப்படைய வாய்ப்பு இருப்பதால் மக்கள் அச்சமடைந்து வருகின்றனர்,

நான் பொறுபேற்ற பிறகு முதல் வேலையாக கழிவு நீர் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் என்றார்,

சாதாரண மக்கள் சொல்லும் வார்த்தை என்பதால் யார் வந்தாலும் எங்களுக்கு என்ன பிரியோஜனம் என்று கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது அப்போது 50 ஆண்டு கால ஆட்சியில் என்ன செய்தீர்கள் இலவச திட்டஙகளை அறிவித்ததை தவிர மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து தரவில்லை என்று தெரிவித்தார்.

# சென்னைக் கிறித்தவக் கல்லூரி தன்நிதிப் பிரிவின் 24வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது



தாம்பரம் ஏப். 01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் (MCC) சுயநிதிப் பிரிவின் 24வது பட்டமளிப்பு விழா கல்லூரி ஆண்டர்சன் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவுக்குக் கல்லூரியின் முதல்வரும் செயலருமான முனைவர் பால் வில்சன் தலைமை தாங்கினார். தேசிய வேதியியல் ஆய்வகத்தின் (CSIR) மேனாள் இயக்குநர் பத்மஸ்ரீ முனைவர் சுவாமிநாதன் சிவராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினார்.

விழாவின் முக்கிய நிகழ்வுகள் பிற்பகல் 2:30 மணிக்குக் கல்லூரி ஆயர் அருள் இராஸ் அவர்களின் இறை வேண்டுதலோடு விழா தொடங்கியது. தொடர்ந்து கல்லூரி நிதி ஆளுநர், மேனாள் மாணவர்களின் இறைவணக்கம் நடைபெற்றது. கல்லூரிப் பொருளாளர் சைரஸ் கல்லுபுரக்கல் சிறப்பு விருந்தினரை வரவேற்றார். முதல்வர் முனைவர் பால் வில்சன், 2023 2024 கல்வியாண்டில் கல்லூரி அடைந்துள்ள கல்விச் சாதனைகள், உள்கட்டமைப்பு, பண்பாட்டு உச்சங்களை ஆண்டறிக்கையாகச் சமர்ப்பித்தார்.

2024ஆம் ஆண்டில் பட்டம் முடித்த 848 இளநிலை மாணவர்கள், 165 முதுநிலை மாணவர்கள் உள்ளிட்ட 1013 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

சிறப்பு விருந்தினர் முனைவர் சுவாமிநாதன் சிவராமன் தனது உரையில், ‘உண்மையான வெற்றி என்பது கல்வி நிறுவனங்கள் மூலம் பெறும் திறமைக்கும், வாழ்வியல் விழுமியங்கள் வாயிலாகச் செதுக்கப்படும் பண்பிற்கும் இடையே உள்ள சமநிலையில் உள்ளது’ என்று குறிப்பிட்டார். இன்றைய செயற்கை நுண்ணறிவு (AI) உலகில், மாணவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளவும் கற்றல், கற்றதை மறத்தல், மீண்டும் கற்றல்" (Learning, Unlearning, and Relearning) என்னும் முறையிலான பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவும் அவர் அறிவுறுத்தினார்

இதில் நடைபெற்ற அகில இந்திய நடுவணரசுப் பணியாளர் தேர்வில் (UPSC) 251வது இடம் பிடித்த கல்லூரி மாணவி அதிதி கிருஷ்ணதேவ் மேடையில் சிறப்புச் செய்யப்பட்டு, பட்டமளிக்கப் பெற்றார் சிறந்த துறைக்கான விருது கணினிப் பயன்பாட்டியல் துறைக்கு வழங்கப்பட்டது.

பட்டதாரிகள் அனைவரும் முதல்வர் முனைவர் பால் வில்சன் தலைமையில் பட்டமேற்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். கல்லூரி மாணவச் சங்கத்தின் செயலர் என். விக்னேஷ்வர் நன்றியுரையாற்றினார்






# பணி நிறைவு பாராட்டு விழா

சென்னை,ஏப்.1-

சென்னை பெருநகர காவல்துறையில், 41வருட காலமாக சிறப்பாக பணியாற்றி வந்த, டிராபிக் உதவி ஆய்வாளர் மு.காசி விஸ்வநாதன் அவருக்கு, காவல் துறையில் இருந்து பணி நிறைவு பெறுகிறார். அவருக்கு பணி நிறைவு பாராட்டு விழா திரு.வி.க நகர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில், நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செம்பியம் ஏசி ஜெயக்குமார், மற்றும் ஆவடி போக்குவரத்து உதவி ஆய்வாளர் உமாபதி அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனரர், மேலும் அவருடன் பணியாற்றிய, காவல்துறை சக ஊழியர்கள், நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## பழனி சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நிர்வாகிகளால் புறக்கணிக்கப்பட்டது

பழனி ஏப். 01-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தனியார் மஹாலில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது இந்த நிகழ்வின்

நிர்வாகிகளின் அதிருப்திக்கான காரணங்களை வெளிகாட்டியது.

அறிமுகம் இல்லாத வேட்பாளர் தலைமை அறிவித்த வேட்பாளர் முன்னாள் அதிமுக மீனவர் அணி பொறுப்பாளர் மகன் பிரவீன் குமார் தங்களுக்கு முற்றிலும் அறிமுகம் இல்லாதவர் என்றும், இதற்கு முன்பு அவர் எந்தவொரு கட்சி நிகழ்வுகளிலும் பங்கேற்றதில்லை என்றும் நிர்வாகிகள் குற்றம் சாட்டுகின்றனர்உழைப்பு அங்கீகரிக்கப்படவில்லை கடந்த நான்கு ஆண்டுகளாக கிளைச் செயலாளர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கட்சி வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள், தலைவர்களின் பிறந்தநாள் விழாக்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி, களத்தில் நின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவில்லை என்ற வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளனர் "அறிமுகம் இல்லாத வேட்பாளருக்குப் பணி செய்ய மாட்டோம்" எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ள நிர்வாகிகள், இந்த அறிமுகக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.

இந்த மோதல் போக்கு, தேர்தல் நெருங்கும் வேளையில் கட்சியின் களப்பணிகளைப் பாதிக்கக்கூடும் என்பதால், தலைமை தலையிட்டு இந்தப் பிரச்சினையைச் சரிசெய்யுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மண்டல தேர்தல் பொறுப்பு அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், காமன்தொட்டி கோபசந்திரம் தட்சண திருப்பதி அருள்மிகு வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் தேரோட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் சாமி தரிசனம் செய்து, துவக்கி வைத்தார். உடன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ராமுவேல், வட்டாட்சியர் ரமேஷ், ஆய்வாளர் சக்தி, அறங்காவல் குழு தலைவர், ஆலய திருப்பணிக்குழு நிர்வாகிகள் ஆர்.நாராயணசாமி, வெங்கடேஷ், கிருஷ்ணப்பா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## திருத்தணியில் போலீஸ் பிடியிலிருந்து மணல் கடத்தல் நபர் தப்பியோட்டம்

### போலீசார் மெத்தனப்போக்கா?

திருத்தணி. ஏப்.1-

திருவள்ளூர் மாவட்டம் பொன்பாடி சோதனைச் சாவடியில், ஆந்திராவிலிருந்து வந்த ஒரு டிப்பர் லாரியை மதுவிலக்கு அமல் பிரிவு போலீசார் சோதனையிட்டனர். அதில் எம்.சாண்ட் (M-Sand) மணலுக்கு அடியில் தார்பாய் போட்டு மறைத்து மணல் கடத்தி வருவது கண்டுபிடிக்கப்பட்டது.




இதையடுத்து லாரியைப் பறிமுதல் செய்த போலீசார், ஓட்டுநரான கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த பாபு என்பவரைப் பிடித்து, திருத்தணி சட்டம் ஒழுங்கு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட பாபுவை லாரியை ஓட்டச் சொல்லி, காவலர்கள் முருகன் மற்றும் கதிர்வேல் ஆகியோர் உடன் வந்துள்ளனர்.

திருத்தணி புதிய பைபாஸ் மேம்பாலம் அருகே வந்தபோது, லாரி பழுதாகிவிட்டதாகக் கூறி வண்டியை நிறுத்திய பாபு, போலீசாரின் கண் முன்னாலேயே அங்கிருந்து தப்பியோடினார். அப்போது அவ்வழியாக வந்த ஒரு இருசக்கர வாகனத்தில் ஏறி அவர் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

குற்வாளி தப்பிச் செல்ல போலீசார் ஏதுவாகச் செயல்பட்டார்களா அல்லது அவர்களின் மெத்தனப் போக்கால் அவர் தப்பினாரா எனப் பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்புகின்றனர்.

திருத்தணி வழியாகத் தினமும் 50க்கும் மேற்பட்ட லாரிகளில் மணல் கடத்தப்படுவதாகவும், வருவாய்த் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் உள்ளூர் போலீசார் இதைக் கண்டுகொள்வதில்லை எனவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

தற்போது, தப்பியோடிய மணல் கடத்தல் நபர் பாபுவைத் தேட, திருத்தணி உதவி காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## பர்கூர் பகுதியில் 50க்கும் மேற்பட்டோர் கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, ஏப் 01-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் மத்திய ஒன்றியம், ஒப்பதவாடி ஊராட்சியில் பர்கூர் மத்திய ஒன்றிய செயலாளர் காந்தி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாமக மற்றும் அதிமுக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 50 க்கும் மேற்பட்டோர் கிழக்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சி பணிகளால் ஈர்க்கப்பட்டு, இவர்கள் திமுகவில் இணைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில், புதியதாக இணைந்தவர்களுக்கு கட்சித் துண்டு அணிவித்து உற்சாகமாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன் மூலம் பர்கூர் பகுதியில் திமுகவின் அமைப்பு வலுப்பெற்று, தேர்தலை முன்னிட்டு கட்சிக்கு கூடுதல் பலம் கிடைத்துள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும், “தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தை காக்க உதயசூரியனின் ஒளி ஒவ்வொரு இல்லத்திலும் ஒளிர வேண்டும்” எனவும், கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்புடன் மற்றும் தொகுதி மக்களின் பேராதரவுடன் வரவிருக்கும் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற உறுதி எடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, இளைஞரணி ராஜேஷ், முன்னாள் கவுன்சிலர் சக்கரவர்த்தி,ராமன், கோபி கழகப் பிரமுகர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



# அழிஞ்சிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆண்டு விழா

மாதவரம், ஏப். 1-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியத்திற்கு உட்பட்ட அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் விளையாட்டு தினவிழா மற்றும் பள்ளி ஆண்டு விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் நாராயணன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர் சரளா அனைவரையும் வரவேற்றார்.விழாவில் மாணவமாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. பின்னர் விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக புழல் ஒன்றிய வட்டார கல்வி அலுவலர் ராஜேந்திரன், புழல் ஒன்றிய வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுனர் கவிதா, பள்ளி மேலாண்மை குழு தலைவி அமுதா ஆகியோர் கலந்துகொண்டு விளையாட்டு போட்டிகளில் வெற்றிபெற்ற சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவமாணவிகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழை வழங்கினர். இதனைத்தொடர்ந்து இந்த கல்வி ஆண்டில் கல்வியில் சிறந்து விளங்கிய சுமார் 120 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு பொருட்களை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். மேலும் பள்ளி சார்பில் அனைத்து மாணவமாணவிகளுக்கு மதியம் உணவு, மாலை ஊட்டச்சத்து உணவுகளை வழங்கினர். இதில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், சகஆசிரியர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர். முடிவில் ஆசிரியர் இந்திரா அனைவருக்கும் நன்றி கூறினார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், 100% தேர்தல் வாக்குப்பதிவை வலியுறுத்தி 85 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களால் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களுடன் ரங்கோலி கோலம் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், கலந்து கொண்டு பார்வையிட்டார். அருகில், உதவி ஆட்சியர் (பயிற்சி) ச.வினோதினி., தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு , மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சி.தங்கவேல் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



## தென் மாவட்ட அரசியலில் புது சூறாவளி

# சசிகலா அணியில் இணைந்த இசக்கி ராஜா - NDAக்கு திறந்த சவால்!

மதுரை: ஏப். 1-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழக அரசியல் களம் புதிய திருப்பங்களைச் சந்தித்து வரும் நிலையில், சசிகலா தலைமையிலான அணியில் இணைந்து பசும்பொன் மக்கள் தேசிய கட்சி களம் காண உள்ளதாக நிறுவனர்தலைவர் இசக்கி ராஜா அறிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசுகையில், சசிகலா தரப்பில் தங்களுக்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதன் அடிப்படையில் சாத்தூர் தொகுதியில் தானும், ஆலங்குளம் தொகுதியில் கட்சி தலைவர் மாடசாமியும், சிவகாசியில் கணேசனும் போட்டியிட உள்ளதாக கூறினார்.

மேலும், அதிமுக முன்னாள் பொதுச்செயலாளர் வி.கே. சசிகலா தலைமையிலான அணிக்கு ஆதரவாக செயல்படுவதாகவும், எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான ழிஞ்கி கூட்டணிக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

முக்குலத்தோர் சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளை மக்கள் மறக்கவில்லை என்றும், தென் மாவட்டங்களில் ழிஞ்கி கூட்டணியை தோற்கடிப்பதே தங்களின் பிரதான இலக்கு என்றும் வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்கள் உதாரணத்தை முன்வைத்து, அண்ணா திமுகவை மீட்டெடுக்கும் சசிகலாவின் முயற்சிக்கு நான் துணை நிற்பேன் என்று உணர்ச்சிவசமாக கூறினார்.

மற்ற கட்சிகள் தேர்தல் காலத்தில் மட்டுமே மக்களை நினைவுகூரும் நிலையில், எப்போதும் மக்களுக்காகப் போராடி வந்துள்ளேன் என்றும் குறிப்பிட்டார். மேலும், எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அணியின் அரசியல் இந்தத் தேர்தலோடு முடிவுக்கு வரும் என்றும், சாத்தூர் தொகுதியில் வெற்றி பெற்று அனைத்து சமூக மக்களுக்கும் பாதுகாவலனாக செயல்படுவேன் என்றும் உறுதி தெரிவித்தார்.தென் மாவட்டங்களில் வாக்கு வங்கிகள் இந்த முறை ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என தெரிவித்தார்.



# குமரி மாவட்டம் பூதப்பாண்டி லுத்தரன் தொடக்கப்பள்ளி ஆண்டு விழா

கன்னியாகுமாரி. ஏப்.1-

பூதப்பாண்டி அருகே உள்ள ஆண்டி தோப்பு லுத்தரன் தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா நேற்று நடந்தது. போதகர் ஆனந்த் பிரிய மோகன் ஆரம்ப ஜெபம் செய்தார். தலைமையாசிரியை ஆர்லின் சுரேஷ் ரீட்டா வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக நாகர்கோவில் சபை சங்க தலைவர் சத்யநாதன் செயலாளர் மாதேவ் சாந்தையா லுத்தரன் பள்ளியின் தாளாளர் சாது ஏசுமாணிக்கம் அசோக் பீட்டர் டாக்டர் யோசுவா தலைமை ஆசிரியர் மார்ட்டின் பிரேம் சந்தர் வி என் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் பள்ளி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு அசோக் பீட்டர் மற்றும் ஜீவன் பரிசு வழங்கினர். ஆசிரியை லோகநாயகி நன்றி கூறினார்.

# தொகுதி இல்லை ஆனால் உறுதி தளராது! - திமுக கூட்டணிக்கு மக்கள் விடுதலை கட்சி முழு ஆதரவு !




மதுரை, ஏப். 1-

மதுரை செய்தியாளர் அரங்கத்தில் மக்கள் விடுதலைக் கட்சி நிறுவனத் தலைவர் முருகவேல்ராஜன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது 2019ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முதல் 2026ஆம் ஆண்டு நடைபெற்று வரும் சட்டமன்ற தேர்தல் வரை, மக்கள் விடுதலை கட்சி திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இணைந்து செயல்பட்டு வருகிறது.

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, திமுக கூட்டணியில் ஒரு தொகுதி ஒதுக்கீடு செய்ய கோரிக்கை வைத்திருந்த நிலையில், மார்ச் 2ஆம் தேதி அண்ணா அறிவாலயத்தில் திமுக தேர்தல் குழுவுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன்போது, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், எதிர்பார்த்த தொகுதி ஒதுக்கீடு வழங்கப்படாதது மக்கள் விடுதலை கட்சியினரிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், திமுக மீண்டும் ஆட்சி அமைந்த பின் கட்சிக்கு முக்கியமான அரசு பொறுப்பு வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாஜக மற்றும் ஸிஷிஷி போன்ற மதவாத, பாசிச சக்திகள் தமிழகத்தில் வேரூன்றக் கூடாது என்ற நிலைப்பாட்டில் மக்கள் விடுதலை கட்சி உறுதியாக உள்ளது. அதன்படி, மோடிரூஎடப்பாடி தலைமையிலான ழிஞ்கி கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் என்பதில் கட்சி உறுதி எடுத்துள்ளது.

எனவே, தொகுதி கிடைக்காத போதிலும், 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான கூட்டணிக்கு மக்கள் விடுதலை கட்சி முழு ஆதரவை வழங்கும் என்றும், கூட்டணியின் வெற்றிக்காக கட்சி தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்கள் என தெரிவித்தார்.



# வாக்கு வேட்டையில் திடீர் 'பிரேக்': உதயகுமார் வாகனத்தை நிறுத்தி சோதனை - திருமங்கலம் சூடு பிடித்த அரசியல்!

மதுரை: ஏப்.1-

திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர்.பி. உதயகுமார் பிரச்சார வாகனத்தை பறக்கும் படையினர் திடீரென சோதனை செய்த சம்பவம் தேர்தல் பரபரப்பை அதிகரித்துள்ளது.

திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியத்தின் மைத்தான்பட்டி, சேர்வைக்காரன்பட்டி, சித்தூர், புதுப்பட்டி, மறவபட்டி, சித்தாலி, உவரி, வில்லூர் உள்ளிட்ட பகுதிகளில் இரண்டாவது நாளாக அவர் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

மைத்தான்பட்டியில் பிரச்சாரம் முடித்து சேர்வைக்காரன்பட்டிக்கு செல்லும் வழியில், பறக்கும் படையினர் அவரது தேர்தல் பிரச்சார வாகனத்தை சுமார் 5 நிமிடங்கள் சோதனை செய்தனர். சோதனைக்கு முழு ஒத்துழைப்பையும் உதயகுமார் வழங்கிய நிலையில், பணம் அல்லது பரிசுப் பொருட்கள் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை.

ஏற்கனவே பலமுறை அவரது பிரச்சார நடவடிக்கைகள் மீது சோதனை மேற்கொண்ட பறக்கும் படையினர், தற்போது வாகனத்தையும் சோதனை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் பிரச்சாரத்தில் பேசிய அவர், புரட்சித்தலைவர் எம்.ஜி. ராமச்சந்திரன், புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா ஆகியோரின் ஆசீர்வாதத்துடன், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ஆதரவுடன் போட்டியிடுகிறேன் என்றார்.

"மக்களுக்கு நான் என்றைக்கும் நம்பிக்கையாக இருப்பேன்; உயிர் போனாலும் நம்பிக்கை துரோகம் செய்ய மாட்டேன். திமுக ஆட்சியில் சட்ட ஒழுங்கு சீர்கெட்டு, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியுள்ளது. போதைப்பொருள் பிரச்சனை அதிகரித்துள்ளது. இதை சரி செய்ய எடப்பாடியார் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும்" என்று குற்றம்சாட்டினார்.

மேலும், "திருமங்கலம் தொகுதியில் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் திருமங்கலம்ரூ மதுரை மெட்ரோ ரயில் திட்டம் உறுதியாக செயல்படுத்தப்படும்" என்றும் தெரிவித்தார்.

இறுதியாக, "2026 சட்டமன்ற தேர்தலில் இரட்டை இலைக்கு வாக்களித்து அதிமுக கூட்டணியை வெற்றிபெறச் செய்யுங்கள்" என்று வாக்காளர்களிடம் கேட்டுக்கொண்டார்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமாருக்கு நேற்று திருப்புவனத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கை மாறன் தலைமையில் திமுகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்



# திருத்தணி முருகன் கோயில் கார் பார்க்கிங் பகுதியில் தீ விபத்து

## 200 கார்கள் தப்பின!

திருத்தணி,ஏப்.1-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலைப்பாதையில் உள்ள கார் பார்க்கிங் பகுதியில் இன்று திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

மலையில் உள்ள மொட்டை அடிக்கும் நிலையம் மற்றும் ஏகாத்தம்மன் கோயில் அருகிலுள்ள புண்ணாக்கு மலைப் பகுதியில், கோயில் நிர்வாகத்தால் வெட்டி வைக்கப்பட்டிருந்த காய்ந்த மரங்களில் திடீரென தீ பற்றியது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கொழுந்துவிட்டு எரிந்த தீயால் அப்பகுதி முழுவதும் புகைமூட்டம் சூழ்ந்தது. இதனால் கோயிலுக்கு வந்த பக்தர்களுக்குக் கண் எரிச்சல் ஏற்பட்டு கடும் அவதிக்குள்ளாகினர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருத்தணி தீயணைப்புத் துறையினர், சுமார் 30 நிமிடம் போராடி தீயை அணைத்தனர். அதிர்ஷ்டவசமாக, தீ விபத்து நடந்த இடத்தின் அருகிலேயே நிறுத்தப்பட்டிருந்த 200க்கும் மேற்பட்ட சொகுசு கார்கள் எவ்வித சேதமுமின்றி தப்பின. தீயணைப்பு வீரர்களின் துரித நடவடிக்கையால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. மலைக்கோயில் பகுதியில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்து பக்தர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சிவகங்கையில் வானவில் மன்ற மீளாய்வு மற்றும் பாராட்டு விழா





சிவகங்கை ஏப்.01-

சிவகங்கை மருதுபாண்டியர் நகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறையின் கூட்டரங்கில் மார்ச் 2026 வேலை அறிக்கை சமர்ப்பிக்கும் மீளாய்வுக் கூட்டம் மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. வானவில் மன்றக் கருத்தாளர் பிரின்சி தீபா வரவேற்றார். சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி தலைமை வகித்து நான்கரை ஆண்டுகள் வானவில் மன்ற கருத்தாளர்களாக சிறப்பாக பணியாற்றிய அனைவருக்கும் சர் சி வி இராமனின் புத்தகம் வழங்கி பாராட்டு தெரிவித்து ஆலோசனைகள் வழங்கினார். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ முன்னிலை வகித்தார். இந்திய வளர்ச்சி கழக அமைப்புசார் வானவில் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாலா மார்ச் மாத வேலை அறிக்கையை பெற்றுக்கொண்டு பாராட்டு தெரிவித்தார். பள்ளிக் கல்வித்துறை வானவில் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட துணைத் தலைவர் பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். முதன்மைக் கருத்தாளர் வானவில் மன்ற இணை ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி வானவில் மன்றக் கருத்தாளர்கள் நான்கரை ஆண்டுகளாக அரசு பள்ளி மாணவ மாணவிகளிடம் அறிவியல் மனப்பான்மை மற்றும் அறிவியலில் ஆய்வு மனப்பான்மையை உருவாக்க எடுத்துக்கொண்ட பல்வேறு முயற்சிகளை வெகுவாக பாராட்டினார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் கையடக்க வருடாந்திர நாட்காட்டியை அனைத்து வானவில் மன்ற கருத்தாளர்களும் பெற்றுக்கொணடனர். வானவில் மன்ற கருத்தாளர்களுக்கு வழங்கப்பட்ட கையடக்க கணினி பள்ளிக் கல்வித்துறையிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. வேலை அறிக்கை தொகுப்பு போன்ற படிவங்கள் ஒப்படைக்கப்பட்டது.

வானவில் மன்றக் கருத்தாளர் ஜெயப்பிரியா நன்றி கூறினார். அனைத்து ஒன்றியங்களிலும் இருந்து பணிபுரியும் வானவில் மன்ற கருத்தாளர்கள் தங்களை சிறப்பாக வழிநடத்திய ஒருங்கணைப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161